# கடந்த ஆண்டு 646 தரவுக் கசிவுகள்

## இலக்கவியல்துறை அமைச்சர் தகவல்




**கோலாலம்பூர், அக். 18-**

**கடந்த ஆண்டு 646 தரவுக் கசிவுகள் நாட்டில் நிகழ்ந்துள்ளதாக இலக்கவியல் துறை அமைச்சர் கோபிந்த் சிங் டியோ கூறினார்.**

கடந்த 2022ஆம் ஆண்டைவிட இந்த எண்ணிக்கை மிக அதிகம் எனக் கூறிய அவர், 2022ஆம் ஆண்டு 50 தரவுக் கசிவுச் சம்பவங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளையில் இவ்வாண்டு செப்டம்பர் மாதம் வரை 427 தரவுக் கசிவுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக தமது அமைச்சு அடையாளம் கண்டுள்ளதாக அவர் கூறினார்.

தரவுக் கசிவுச் சம்பவங்கள் நாட்டின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் கூறினார். தரவுக் கசிவு ஏற்படும்போது தனிப்பட்ட நபரின் விவரங்கள் பல்வேறு தரப்பினருக்குப் போய்ச் சேரும் என்பதுடன் அரசாங்க ரகசியங்களும் பாதுகாப்புத் தொடர்பான முக்கியத் தகவல்களும் பல்வேறு தரப்பினரால் களவாடப்படும்போது அது நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் மிரட்டலை ஏற்படுத்தும் என அவர் கூறினார்.

இதுபோன்ற நடவடிக்கை இணையச் சேவைக்குப் பெரும் மிரட்டலை ஏற்படுத்தும். இணையத்தில் உள்ள விவரங்களைக் கண்காணிக்கும் அதேவேளையில் சட்டவிரோதமாக அதனுள் செல்ல முடியும் என அவர் கூறினார்.

தனிநபர்களின் ரகசியக் கோப்புகள் பல்வேறு தரப்பினரின் கைகளில் சிக்கும்போது மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழப்பார்கள் என அவர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று மக்களவையில் கேள்வி - பதில் நேரத்தின்போது கோத்தா மலாக்கா உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) கூ பொய் தியோங்கின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொறுப்பற்ற சில தரப்பினர் புரியும் இதுபோன்ற தரவுக் கசிவு நடவடிக்கைகள் தனிப்பட்ட நபர்களின் விவரங்களைத் திருடுவது உட்பட நாட்டின் பாதுகாப்புக்கும் பெரும் மிரட்டலை ஏற்படுத்தும் என்பதால் இது ஒரு கடுமையான குற்றச்செயலாகக் கருதப்படும் என்றார்.

இதுபோன்ற தரவுகள் கசியும்போது அது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தும் அதேவேளையில் அரசியல் நிலைத்தன்மையையும் பாதிக்கும் எனவும் அவர் கூறினார்.

எனவே நாட்டில் தரவுக் கசிவு சம்பவங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கும் அதேவேளையில் மக்களின் விவரங்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



### 40 கோடி தரவுகள் திருடப்பட்டு

# வட்டி முதலைகளிடம் விற்பனை

## பாகிஸ்தான் ஆடவர் கைது

கோலாலம்பூர், அக். 18-

பாகிஸ்தான் ஆடவர் ஒருவர் 40 கோடி இலக்கவியல் தொடர்பான தரவுகளைத் திருடி வட்டி முதலைகளுக்கு விற்பனை செய்துவந்த சம்பவம் போலீசார் மேற்கொண்ட ஓப்ஸ் கப்பாஸ் சோதனை நடவடிக்கையின்போது அம்பலமானது.

கடந்த செப்டம்பர் 5ஆம் தேதி தலைநகரில் மேற்கொள்ளப்பட்ட ஓப்ஸ் கப்பாஸ் சோதனை நடவடிக்கையின்போது பாகிஸ்தான் ஆடவர் 40 கோடி இலக்கவியல் தரவுகளைத் திருடி அவற்றை வட்டி முதலைகளுக்கு விற்பனை செய்து வந்தது தெரிய வந்ததாக புக்கிட் அமான் போலீஸ் தலைமையகத்தின் வர்த்தக குற்றப்புலனாய்வுத்துறை இயக்குநர் டத்தோஸ்ரீ ரம்லி முகமட் யூசோப் கூறினார்.

இந்தத் தரவுகள் அனைத்தும் நிறுவனங்கள், குறிப்பிட்ட தரப்பினரிடமிருந்து திருடப்பட்டதாகும் என அவர் கூறினார். திருடப்பட்ட தனிநபர்களின் அடையாளக்கார்டு எண், கைப்பேசி எண், வங்கிக் கணக்கு, வீட்டு முகவரி ஆகியவை வட்டி முதலைகளுக்கு விற்பனை செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகளுடன் பதிவு செய்து கொண்டுள்ளதாக நம்பப்படும் ஓர் அகப்பக்கத்தை சைபர் செக்கியூரிட்டி மலேசியா அடையாளம் கண்டபோது இது தெரிய வந்ததாக அவர் கூறினார்.

மேற்குறிப்பிட்ட இந்த அகப்பக்கம் தனிநபருக்கு மாதம் 200 முதல் 800 ரிங்கிட்டிற்கு வாடகைக்கு விடப்பட்டு வந்ததாகவும் அவர் கூறினார். திருடப்பட்ட இந்தத் தரவுகள் வேண்டிய நபர்களுக்கு ஒரு ரிங்கிட் 50 காசு முதல் 2 ரிங்கிட் வரை விற்பனை செய்யப்பட்டு வந்ததாக நேற்று மெனாரா கேபிஜேயில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பாகிஸ்தான் ஆடவருடன் 4 உள்நாட்டு ஆடவர்களும் போலீசாரால் கைது செய்யப்பட்டதாக அவர் கூறினார். இதில் கடனை வசூலிக்கும் தரப்பினர் உட்பட குறிப்பிட்ட சில ஏஜெண்டுகளும் இந்தத் தரவுகளைத் திருட்டுத்தனமாக வாங்கியுள்ளதாக அவர் விவரித்தார்.

47 வயதுடைய அந்த பாகிஸ்தான் ஆடவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண வேலை செய்வதற்காக நாட்டில் நுழைந்துள்ளார். ஆனால் அவர் நாட்டிற்கு வந்த ஓராண்டுக்குள் தரவுகளைத் திருடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாக நம்பப்படுவதாக டத்தோஸ்ரீ ரம்லி கூறினார்.

குறிப்பிட்ட அந்த ஆடவர் தரவுகளை விற்பனை செய்யும் பட்டியலில் கடனை வசூலிப்பவர்கள், வட்டி முதலைகள் ஆகியோரும் அடங்குவர் என்றார். திருடப்படும் இதுபோன்ற தரவுகளின் வழி பல்வேறு விவரங்களைத் திருட முடியும். ஆனால் இவ்விவகாரத்தில் அவர்கள் கடனை வசூலிப்பதற்காகவே மேற்குறிப்பிட்ட இந்தத் தரவுகளை விற்பனை செய்துள்ளனர் என்றார்.

## குடியுரிமை சட்டதிருத்த மசோதா

### மக்களவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது



கோலாலம்பூர், அக். 18-

2024ஆம் ஆண்டுக்கான குடியுரிமை தொடர்பான சட்டதிருத்த மசோதா நேற்று மக்களவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டரசு அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து இந்தச் சட்டதிருத்த மசோதா முதலாவது, இரண்டாவது, மூன்றாவது முறையாக வாசிக்கப்பட்டு மக்களவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தச் சட்டதிருத்த மசோதாவை ஆதரிப்பதற்கு வாக்களிப்பு நடைபெற்றது.

இதற்கு ஆதரவாக 206 உறுப்பினர்கள் வாக்களித்த வேளையில் ஒருவர் இதற்கு மறுப்பு தெரிவித்தார்.

அதேவேளையில் 14 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. வாக்களிப்புக்குப் பின்னர் இந்தச் சட்டதிருத்த மசோதா மக்களவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சபாநாயகர் டான்ஸ்ரீ ஜொஹாரி அப்துல் தெரிவித்தார்.

முன்னதாக உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைஃபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் இந்தச் சட்டதிருத்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தார். இதன் மீதான விவாதத்தில் அரசாங்கம், எதிர்க்கட்சியினர் என 70 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சட்டதிருத்த மசோதாவில் வெளிநாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்குக் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு அக்குழந்தையின் மலேசியத் தாய்க்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு மலேசியத் தந்தைக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.


